ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/64 - 2018 මැයි මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.17

*2071/64 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம்

*(362 ஆம் அத்தியாயமான) தல யாத்திரைக் கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1951, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 1955, மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகார ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின்படியும் 2011.06.10 ஆந் திகதிய 1710 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் (வருடாந்த பெரஹரா உற்சவம்) தொடர்பான யாப்பின் படியும் பதுளை பிரதேச செயலாளர் என். எம். ஞானவதி ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2018 ஆம் ஆண்டின் பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளைப் பிறப்பிக்கின்றேன் :-*

*1. 2018, மே மாதம் 28 ஆந் திகதிய பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு 2018, மே 29 மற்றும் 30 ஆகிய இரு தினங்களில் வீதி ஊர்வலம் முடிவடைந்து முதியங்கனை ரஜ மகா விகாரையினை வந்தடைந்தவுடன் நிறைவுறும் என்பதை அறியத்தருகின்றேன்.*

*2. **பெரஹராவின் பயண மார்க்கம்** :*

*2018, மே மாதம் 29 ஆந் திகதி விஹாரையின் உள்ளே பெரஹரா உற்சவம் ;*

*2018, மே மாதம் 29 ஆந் திகதி வீதி ஊர்வலம் முதியங்கனை விகாரையிலிருந்து ஆரம்பமாகி புகையிரத நிலைய வீதி, அநகாரிக தர்மபால மாவத்தை, கீழ் ராஜ வீதி, ராஜ வீதி, நூலக மாவத்தை, கீழ் வீதியினூடாக (லோவர் வீதி) முதியங்கனை விகாரையை வந்தடைதல் ;*

*2018, மே மாதம் 30 ஆந் திகதி முதியங்கனை விஹாரையில் இருந்து புகையிரத நிலைய வீதி, அநகாரிக தர்மபால மாவத்தை, கொகோவத்த வீதி, உதயராஜ மாவத்தை, ராஜ வீதி, பசார் வீதி, கீழ் வீதியினூடாக (லோவர் வீதி) முதியங்கனை விகாரையினை வந்தடைதல் ;*

*3. பதுளை முதியங்கனை விகாரை பூமி மற்றும் விகாரை சுற்றுப்புற பூமிகளில் உணவு சமைத்தல், வியாபாரம் செய்தல், தடை செய்யப்பட்டுள்ளது.*

1A - G 27672 — 08 (2018/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*4.* பெரஹரா காலத்திற்குள் பிரதான பாதையில் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை தடை செய்கிறேன். துவிச்சக்கர வண்டி, மாட்டு வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் எனது அல்லது விகாரையின் பொறுப்பான நிலமே அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லாமல் விகாரைக் காணிக்குள் வருவதைத் தடை செய்கிறேன்.

*5.* பெரஹரா ஊர்வலம் செல்லும் பாதைகளில் பதுளை மாநகர சபையினால் முறையான அனுமதியுடன் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ள நிரந்தரக் கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். காணிப்பகுதிகளை குத்தகைக்கு வாங்கும் வியாபாரிகளினால் விகாரையின் பெரஹராவின் பின் தமது தற்காலிகக் கட்டிடங்களை அகற்றியதன் பின், பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் விகாரைக் காணிக்குள் உள்ள பொலித்தீன் உட்பட அனைத்து குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின்படி அகற்ற வேண்டும்.

*6.* என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் விகாரைக் காணி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எந்தவொரு தற்காலிகக் கட்டிடங்களையும் அமைப்பதை தடை செய்கிறேன்.

*7.* எவரேனும் ஒருவரினால் என்னிடம் அல்லது பதுளை மாநகர சபையின் அனுமதி இல்லாமல் பாதையாக பயன்படுத்தலோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணி அல்லது விஹாரைப் பிரதேசத்திற்குள் ஏதேனும் காணியைப் பயன்படுத்தி குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிப்போ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக் கூடாது.

*8.* பட்டாசு போன்றவற்றை பிரதேசத்திற்குள் பற்றவைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

*9.* பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரின் அனுமதி இல்லாமல் எவரேனும் ஒருவரினால் விகாரைப் பூமி மற்றும் விகாரைச் சுற்றுப்புற பிரதேசங்களில் சீட்டுக்கள், கொடிகள் விற்பனை மற்றும் வேறுவகையான எந்தவொரு விடயத்திற்காகவும் பங்களிப்பு நிதி வசூலிக்கவும் கூடாது.

என். எம். ஞானவதி,
பிரதேச செயலாளர் (பதில்),
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
*2018,* மே *17.*

*06-180*